# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS .No.**165/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. மகேஸ்வரன் | ஊர் | : | தளவாய்பாளையம், திருமேனிநகர் |
| த.பெ. | : | திரு.ராஜ்குமார் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 22 | தொழில் | : | **பொறியியல் படிப்பு** |

2026ம் ஆண்டு திங்கள் பிப்ரவரி-10ஆம் நாள் **பி.சா. 3 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 8.2.2019 தேதியிட்ட எனது தாத்தா எனக்கு பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரம் எழுதி வைத்தார் அதன் அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ. 3**ஆகும். தாவா தள்ளுபடி செய்யவேண்டுகிறேன்.

<u>1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

பி.சா.ஆ. 3 ஆவணம் என் தாத்தா விருப்பபட்டு எழுதிவைத்தாரா என்றால் ஆமாம். எந்தெந்த மனைகளை எனக்கு எழுதி வைத்தார் என்றால் 1, 2, 3,17, 68. அந்த மனைகள் தற்போது யார் அனுபவத்தில் உள்ளது என்றால் எனது தாயார் அனுபவத்தில் உள்ளது. உயில் எழுதும்போது எனது தாத்தா சுயநினைவுடன் நடமாடும் நிலையில் இருந்தார் என்றால் ஆமாம். உயில் எழுதியது எனக்கு எப்போது தெரியும் என்றால் 2021இல் பாட்டி சொல்லி தெரியும். உயில் எழுதுவதற்கு என் தாத்தாதான் விபரம் சொன்னாரா என்றால் ஆமாம். உயில் பத்திரமானது தாத்தா அவருடைய விருப்பத்தின்பேரில் யாருடைய துண்டுதலும் இல்லாமல் எழுதினாரா என்றால் ஆமாம். என் அம்மாவுக்கு நான் எப்போது

செட்டில்மெண்ட் எழுதினேன் என்றால் 6.6.2024. செட்டில்மெண்ட் படி எனது தாயார் தற்போது உரிமையாளர் என்றால் ஆமாம்.

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டு கூடுதல் குறுக்குவிசாரணை என் தாத்தா திருமேனி எனக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். யாருடைய துண்டுதலும் இல்லாமல் என் பெயரில் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். அந்த உயில் பதிவாகியுள்ளதா என்றால் ஆமாம். உயில் விஷயம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2021இல் பாட்டி சொன்னதன்பேரில் தெரியும். 1ஆம் பிரதிவாதி என் அப்பா என்றால் ஆமாம். தாவா சொத்து தாத்தா திருமேனிக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். அவர் அவருடைய தனபாக்கியத்திற்கு ஒரே வாரிசு என்றால் ஆமாம்.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் பிறந்ததேதி என்ன என்றால் 29.5.2003. நான் பிறப்பதற்கு முன்பாக எனது கொள்ளுபாட்டி தனபாக்கியத்தம்மாள் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் முதல் விசாரணை வாக்குமூலம் நான் கொடுத்ததா என்றால் இல்லை.முதல் விசாரணை வாக்குமூலத்தில் கீழே உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதை தயார் செய்ய என் அப்பாதான் விபரம் சொன்னாரா என்றால் இல்லை. அதை தயார் செய்ய யார் விபரம் சொன்னது என்றால் பாட்டி. அதில் உள்ள முழுவிபரமும் தெரியுமா என்றால் தெரியாது. தனபாக்கியத்தம்மாளுக்கு வருமானம் இல்லை என்ற விபரம் பாட்டி சொல்லிதான் தெரியும் என்றால் ஆமாம். தாத்தா பெயர் என்ன என்றால் திருமேனி. அவர் என்ன வேலை பார்த்தார் என்றால் போலிஸார். என் தாத்தாவுக்கு எப்படி சொத்து கிடைத்தது என்றால் அவர் சுயமாக வாங்கினார். அவர் பெயரில் வாங்கினாரா என்றால் அவர் பெயரிலும் வாங்கியுள்ளார், பாட்டி பெயரிலும் வாங்கியுள்ளார். மேற்படி விபரம் பாட்டி சொல்லி தெரியும் என்றால் ஆமாம். என் தாத்தா அவருடைய அம்மா பெயரில் கிரையம் வாங்க காரணம் என்ன என்றால் எனக்கு தெரியாது. என் கொள்ளுபாட்டிக்கு என் தாத்தா திருமேனி மட்டும் வாரிசு என்றால் ஆமாம். நான் தகப்பானருடன் வசிக்கிறேன் என்றால் ஆமாம். வீடு எங்கு உள்ளது என்றால் திருமேனி நகர் விரிவாக்கம், மனை எண்

8இல் வசிக்கிறேன்.அது எப்போது கட்டபட்டது என்றால் 2025இல் குடிபோனோம். அதற்கு முன்பு எங்கு குடியிருந்தோம் என்றால் கௌதம் நகர். என் தாத்தா திருமேனிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான்கு, இரண்டு பையன், இரண்டு பெண்கள். என் தகப்பனாருக்கு எப்போது திருமணம் என்றால் 2002. எனது பெரியப்பாவை அப்பா அவர் திருமணத்திற்கு அழைத்து வந்த விபரம் எனது அப்பாவும், எனது பாட்டியும் சொல்லிதான் தெரியும் என்றால் ஆமாம். எனக்கு எத்தனை அத்தைகள் என்றால் இரண்டு. பெயர் என்ன என்றால் மலர்விழி, மாலதி. இருவருக்கும் திருமணமாகிவிட்டது என்றால் ஆமாம். வாதி என்ன உறவு என்றால் பெரியப்பா. அவருடைய திருமணம் பற்றி எனது அப்பா சொல்லியுள்ளாரா என்றால் தெரியாது. நான் கேட்டேனா என்றால் இல்லை. என் பாட்டி விசாரணைக்கு வந்தபோது நான் உடன் வந்திருந்தேன் என்றால் ஆமாம். அவரை விசாரித்தபோது நீதிமன்றத்தில் இருந்தேன் என்றும் விஷயங்கள் தெரியும் என்றும் சொன்னால் ஆமாம். தாத்தா அப்பா, பெரியப்பா, அத்தைகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். அதன்படி அவரவர்கள் சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் ஆமாம்.என் தாத்தா எங்கள் வீட்டிற்கு எந்த ஆண்டு வந்தார் என்றால் 2016. அதற்கு முன்பு எங்கிருந்தார் என்றால் காட்டுதோட்டத்தில் உள்ள வாதியின்வீட்டில் கீழ்தளத்தில் தாத்தா, பாட்டி வசித்தார்கள். மாடியில் என் பெரியப்பா வசிக்கிறார் என்றால் ஆமாம். என் பாட்டி இன்றுவரை அங்கு வசிக்கிறார் என்றால் ஆமாம். என் தாத்தா 2016 வந்தார் என்றும், என் அப்பா வாதி வீட்டில் இல்லாதபோது தாத்தாவை வலுகட்டாயமாக அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. என் அப்பாவிடம் கான்டரக்டில் நிறையபேர் வேலை பார்த்தார் என்றால் ஆமாம் அதில் ரமேஷ் ஒருவர் இருந்தார் என்றால் தெரியாது. அந்த ரமேஷ்ம் என் அப்பாவும்தான் வாதி வீட்டிலிருந்து என் தாத்தா திருமேனியை வலுகட்டாயமாக அழைத்து போனார் என்றும், அதனால் தாத்தா கீழே விழுந்து காயமாகிவிட்டார் என்றால் தாத்தா உடல்நிலை சரியில்லை என்று போன் செய்ததால் என் அப்பா அழைத்து வந்தார். அப்போது நான் இளவர் என்றால் ஆமாம். எங்கள் வீட்டிற்கு வந்த ஆறுமாதத்தில் தாத்தா எனக்கு உயில் எழுதி வைத்திருப்பார் என்றால் அது எனக்கு தெரியாது. அத்தைகள் திருமணம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அத்தை திருமணம் பற்றி

முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பாட்டி சொல்லி தெரியும் என்றால் ஆமாம். பக்கம் 3 பாரா 5இல் உள்ள வாசகம் 20 மனைவிற்று அந்த பணத்தை வாதி வாங்கி கொண்டு ஈரோட்டில் போய்விட்ட விபரம், அத்தை திருமணத்திற்கு வராத விபரம் பாட்டி சொல்லிதான் தெரியும் என்றால் ஆமாம். 2005 மனைகள் விற்கவில்லை என்றும் 1998இல் காளையாரிடம் விற்றார் என்றால் அது எனக்கு தெரியாது. ரவிசந்திரன் காளையாரிடம் பணம் வாங்கியது குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் பாட்டி சொல்லிதான் தெரியும். என் தாத்தா உயில்எழுதிய விஷயம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது பின்பு தாத்தா பாட்டி சொல்லிதான் தெரியும். எப்போது என்னிடம் சொன்னார்கள் என்றால் 2021 மே மாதம் எனது பிறந்தநாள் அன்று சொன்னார்கள். பிறந்த தேதி என்ன என்றால் 29.5.2003. பி.சா.ஆ.3 உயில் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். உயில் டைப் அடிக்க விபரம் சொன்னது யார் என்றால் தெரியாது. தாத்தா எங்கள் வீட்டில் இருக்கும்போதுதான் பி.சா.ஆ.3 எழுதி வைத்தார் என்றால் தெரியாது. பிளாட்டுகளின் புல எண் என்ன என்றால் 419, 420. மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 20882 சதுரஅடி. என் தாத்தாவுக்கு எத்தனை பேரபிள்ளைகள் என்றால் 8பேர். வாதிக்கு உயில் பற்றி தெரியாது என்றால் எனக்கு தெரியாது. உயில் எழுதிய விபரம் குறித்து என் அப்பாவுக்கு எப்படி தெரியும் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. உயிலை கொடுத்தது யார் என்றால் பாட்டியும், அப்பாவும். உயில் யாரிடம் இருந்தது என்றால் தாத்தா பாட்டியிடம் கொடுத்து வைத்திருந்தார். பாட்டி அப்பாவிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றால் ஆமாம். அவைகள் எந்த வருடம் நடந்தது என்றால் தெரியாது. தாத்தா எங்கள் வீட்டிலிருந்தபோது பாட்டி காட்டுதோட்டத்தில் இருந்தார் என்றால் ஆமாம். பாட்டிக்கும் என் தாத்தாவுக்கு 20வருடமாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் பேசிகொண்டுதான் இருந்தார்கள். என் தாத்தா எங்கள் வீட்டில் சாப்பிட்டாரா, பாட்டி வீட்டில் சாப்பிட்டாரா என்றால் எங்கள் வீட்டில் சாப்பிடுவார், நாங்கள் இல்லாதபோது பாட்டி கொண்டுவந்து கொடுப்பார். தாத்தாவிடம் நான் பேசுவேனா என்றால் பேசுவேன். பாட்டிக்கு தாத்தா சொத்து எழுதவில்லை என்றால் ஆமாம். நான் தாத்தாவிடம் பாட்டிக்கு பிளாட் எழுதி வைக்க கேட்டேனா என்றால் அம்மாதிரியான கேள்விகளை நான் கேட்க கூடாது. சாதாரணமாக என் தாத்தாவும் பாட்டியும் பேசி கொள்ளமாட்டார்கள் என்றால்

பேசிகொள்வார்கள். பாட்டிக்கு சொந்த ஊர் வேதாரண்யம் என்றால் ஆமாம். வாதியின் மனைவியும் அந்த ஊர் என்றால் தெரியாது. பாட்டி வீடும், பெரியம்மா வீடும் ஒரே தெரு என்றால் தெரியாது. உயிலில் சாட்சி கையெழுத்து போடபட்டுள்ளதா என்றால் இரண்டு போட்டுள்ளார்கள். யார் என்றால் முத்து குமார், ரவிகிருஷ்ணன். அவர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் தெரியவில்லை. எங்கு தட்டச்சு செய்யபட்டது என்றால் தெரியாது. உயில் எழுதியபோது தாத்தா நடக்கும் நிலையில் இல்லை என்றால் சரியல்ல. என் தாத்தா என்ன வாகனம் வைத்திருந்தார் என்றால் இருசக்கர வாகனம். டைப் அடிக்கபட்ட ஆர்கேபி கம்யூட்டர் மேலவீதி, 5கிமீ இருக்கும் என்றால் ஆமாம். கம்யூட்டர் டைப் அடிக்கவும், பதிவு செய்யவும் எனது அப்பா உதவி செய்தார் என்றால் இல்லை தாத்தாதான் போனார். 8பேரபிள்ளைகள் இருக்கும்போது எனக்கு மட்டும் என் உயில் எழுதிவைத்தார் என்றால் தாத்தா விருப்பம். உயிலை என் அப்பா தாத்தா எங்கள் வீட்டில் இருக்கும்போது கட்டாயபடுத்தி எனக்கு எழுதி வாங்கிவிட்டார் என்றும் அதனால் அது செல்லாது என்றும் சொன்னால் தவறு.பி.சா.ஆ.3உயில் ஆவணத்திற்கு பிறகு நான் என் அம்மாவிற்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டேன் என்றால் ஆமாம்., அந்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் என்னிடம் உள்ளது என்றால் அம்மாவிடம் உள்ளது. சார்பதிவாளர் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் மகர்நோம்புசாவடி. எழுதி பதிவு செய்த தேதி என்ன என்றால் தெரியவில்லை. சாட்சிகள் உயிருடன் உள்ளார்கள் என்றால் தெரியவில்லை. நான் விசாரித்தேனா என்றால் இல்லை. உயில் ஆவணம் செல்லாத ஆவணம் என்றும் நான் அம்மாவுக்கு அதன்அடிப்படையில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் எழுதி வைத்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 இல கண்ட பிளாட்டுகள் தாத்தா அவருக்காக வைத்திருந்தவை என்றால் ஆமாம். எனது அம்மா நல்லநிலையில் உள்ளார் என்றால் ஆமாம். அம்மாவுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைக்க அப்பா சொன்னார் என்றால் இல்லை. நான்தான் லோன் வாங்குவதற்காக அம்மா பெயரில் எழுதி வைத்தேன்.லோன் வாங்கிவிட்டேன் என்றால் இல்லை. வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2026.02.10 19:12:04 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**